# <u>IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.</u>

## <u>Pr.OP.No.80/2023</u>

சாட்சி : RW– 2

பெயர் : திருமதி. சிவகாமி                                        தேதி : 10.06.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**<u>குறுக்குவிசாரணை</u>**:– ( மனுதாரர் தரப்பில்)

என் தகப்பனார் படுத்த படுக்கையாக இல்லை. 2019ம் ஆண்டு முதல் படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொல்லியிருந்தால் அது தவறாகும். எனக்கும், எனது தகப்பனாருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏதும் இல்லை. எனது தகப்பனார் இறப்பு மற்றும் அவரது காரியத்திற்கு நான் வந்து கலந்து கொண்டேன். எதிர்மனுதாரர்கள் அனைவரும் வந்தோம். என் தகப்பனாரின் இறப்பிற்கு வந்தபோது 1ம் எதிர்மனுதாரரும், எனது தாயாரும் என்னிடமும், எனது இதர சகோதரிகளிடமும் பாக பாத்திய விடுதலை செய்து தருமாறு கேட்டதாக எனது முதல்விசாரணையில் கேட்டுள்ளேன். ஆனால் அவ்வாறு கேட்கவில்லை. இம்மனு தாக்கல் செய்த பிறகு தான் எனது தாயார் என்னிடம் கையெழுத்து போட்டுகொடுக்கும்படியும், அதற்காக பணம் தருவதாகவும் சொன்னார். எனது முதல்விசாரணையில் இம்மனுவிற்கு பின்னிட்டு எனக்கு பணம் தருவதாக எனது தாயார் சொன்னதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. இம்மனுவிற்கு பின்னிட்டுதான் எனது தகப்பனார் உயில் எழுதி வைத்துள்ளார் என்பதை மனு சங்கதிகளின் அடிப்படையில் தெரிந்துகொண்டேன். நான் அந்த உயிலை பார்க்கவில்லை. மேற்படி உயிலையே பார்க்காமல் அதிலுள்ள கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் அல்ல என்று நான் சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தாயார் மற்றும் 1, 5 ம்

R.Velaras
Digitally signed by R.Velaras
Date: 2026.06.10 17:13:26 +0530

I Additional District Judge,
Salem

எதிர்மனுதாரர்கள் சேர்ந்து இம்மனுவிற்காக உயிலை தயார் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் உயிருடன் உள்ளார். அவர் தான் மனுதாரர் ஆவார். தற்போதும் உயிலில் குறிப்பிட்டுள்ள வீட்டில்தான் அவர் குடியிருந்து வருகிறார். அந்த வீடு 500 சதுர அடி பரப்பில் உள்ளது. நாங்கள் சகோதரிகள் அனைவரும் திருமணமாகி அவரவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரும் தனியாக தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாயாரை நாங்கள் யாரும் கவனிப்பதில்லை என்றும், அதனால்தான் என் தகப்பனர் என் தாயாருக்கு ஒரு ஆதரவு செய்யவேண்டும் என்பதற்காக 06.02.2020 அன்று ஒரு உயில் சாசனம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் கர்மகாரியத்திற்கு நாங்கள் வந்தபோது மேற்படி உயிலின் ஒரு சாட்சி அந்த உயிலை எங்கள் அனைவரின் முன்னிலையிலும், படித்து காண்பித்தார் என்றும், நாங்கள் அதற்காக ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலை என் தகப்பனார் அவரது சுயநினைவுடன் முழு மன சம்மதியில் என் தாயார் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் என்றும், எனவே அந்த உயிலை நாங்கள் ரத்து செய்யவேண்டும் என்று கோர இயலாது என்றால் சரியல்ல. என் தாயாரிடம் இருந்து பணம் பறிப்பதற்காக தவறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்குவிசாரணை**</u>:– (1 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

எனது தகப்பனாரின் காரியத்திற்கு சென்றபோது என் தகப்பனார் என் தாயார் பெயருக்கு 06.02.2020 அன்று எழுதி வைத்திருந்த உயிலை படித்து காண்பித்தார்கள் என்றும், நாங்கள் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் இறப்பிற்கு சென்றிருந்தேன். உயில் எதுவும் படித்து காண்பிக்கவில்லை. அன்றைய தினம் நான் தான் உயிலை பெற்று

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.10 17:13:30 +0530
I Additional District Judge,
Salem

பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு ஒரு ஆதரவு செய்து வைக்கவேண்டும் என்பதற்காக தான் என் தகப்பனார் மேற்படி உயிலை எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உயிலை பற்றி நன்கு தெரியும் என்றும், உயிலை பற்றி தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

R.Velaras
Digitally signed by R.Velaras
Date: 2026.06.10 17:13:34 +0530

I Additional District Judge,
Salem